**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.70/2022**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 18 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நடராஜன் | மதம் | : இந்து |
| த/பெ | : கண்ணம்ம நாயுடு (எ) கண்ணய்யா நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 91 | கிராமம் | : ராமகிருஷ்ணாபுரம் |
| தொழில் : | விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**18.02.2026**
**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

6. என் பெயரில் விவசாய நிலம் உள்ளதா என்றால் உள்ளது. என் மீது அ.வ.எண்.54/2015 என வழக்கு உள்ளதா என்றால் தெரியாது. எனக்கு இந்த வழக்கு மட்டும்தான் தெரியும். வாதிக்கும் வாதி குடும்பத்திற்கும் எங்களுக்கும் அடிக்கடி வீட்டு மனை சம்மந்தமாக பிரச்சனை வரும் என்றால் இல்லை. அவரவர் அவரவர் இடத்தில் இருப்போம். காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளோம் என்றால் நான் கொடுக்கவில்லை. வாதி எங்கள் மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் ஒரு முறை கொடுத்துள்ளார். என் மீது உள்ள பட்டாவை மாற்ற வாதி மனு கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. இது தொடர்பாக கிராம நிர்வாக அதிகாரி எங்கள் ஊரில் வந்து விசாரித்தார் என்றால் யாரும் விசாரிக்கவில்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் கிராம நிர்வாக அதிகாரி எங்கள் ஊரில் வந்து விசாரித்தார் என்றாலும் இல்லை.

7. வழக்கு நிலுவையில் இருப்பதாக நான் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் இல்லை. என் வீட்டின் தெற்கே நான் எத்தனை வீடு கட்டியுள்ளேன் என்றால் என் பெரிய மகனுக்கு ஒரு வீடு, எனக்கு ஒரு வீடு, வழக்கு சொத்து ஆக மொத்தம் 3 வீடாகும். பக்தவச்சலம் வீட்டின் அருகே மாட்டு கொட்டம் உள்ளதா என்றால் தற்போது போட்டுள்ளார்கள். என்னிடம்

காட்டப்படும் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த புகைப்படத்தில் எங்கள் வீடு, எங்கள் மாட்டு கொட்டத்திற்கு அருகே பக்தவச்சலம் போட்ட மாட்டு கொட்டம் உள்ளது என்றால் அது நாங்கள் போட்ட கொட்டமாகும். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் நீதிமன்ற ஆணையரின் புகைப்படம் நீ.ம.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள ரோஸ் நிறத்தில் உள்ள வீடு என்னுடையது என்றால் சரிதான். அதில் உள்ள மாடிப்படியுடன் கூடிய வீடு என் தம்பியுடையது என்றால் சரிதான். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் நீதிமன்ற ஆணையரின் புகைப்படம் நீ.ம.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

8. நீ.ம.சா.ஆ 2 ம் புகைபடத்தில் உள்ள வீட்டில் என் தம்பி குடியிருந்து தற்போது தணிகாசலம் குடியுள்ளார் என்றால் ஆமாம். அதை காலி செய்ய சொல்லி நான் சொல்லியுள்ளேன். நான் காலி செய்ய சொல்லி வாதி கேட்காததால் எங்களுக்குள் பிரச்சனை வரும் என்றால் இல்லை. வாதி வீட்டிற்கு தெற்கே தகர சீட்டு போட்ட குடிசை வீடு உள்ளது என்றால் அது குடிசையில்லை. தகர சீட்டை அப்படியே இறக்கி வைத்துள்ளார்கள். அந்த இடத்தில் குளியலறை கழிப்பறை கட்ட கேட்டார்கள் என் இடம் என்பதால் கட்டக்கூடாது என நான் சொல்லிவிட்டேன். பட்டா என் பெயரில் உள்ளதால் சொத்து என்னுடையது என்று நான் எதுவும் தனியாக வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் இருந்து வழக்கு சொத்தை அளக்க வந்தார்களா என்றால் வந்தார்கள். ஏன் அளக்கிரீர்கள் என்று கேட்டேன். நாங்கள் அளந்து எழுத போகிறோம் என்று சொன்னார்கள். அதன்பின்பு நாங்கள் எதுவும் சொல்லவில்லை.

9. வழக்கு சொத்திற்கு என் பெயரில் உரிமை ஆவணம் எதுவும் இல்லை என்றாலும் பட்டா உரிமை ஆவணம் இல்லை என்றாலும் சரியல்ல. உயில் எழுதி வைத்துள்ளார்கள். யார் உயில் எழுதி வைத்தார்கள் என்றால் என் அப்பா எழுதி வைத்தார். யார் யாருக்கு உயில் எழுதி வைத்தார்கள் என்றால் என் மாமனார் எனக்கு வாங்கி தந்தார். அவர் அவரது நிலத்தை விற்று அந்த

பணத்தை வைத்து என் தம்பி இடத்தை வாங்கி தந்தார். என் தம்பி இடத்தை என் மாமனார் வாங்கி கொடுத்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. உயில் எழுதி வைத்துள்ளார். அதை நான் வைத்துள்ளேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் உண்மையிலேயே அவ்வாறு ஆவணம் எதுவும் இருந்திருந்தால் நான் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் ஆவணம் வைத்துள்ளேன்.

10. எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 14ல் **"வழக்கு சொத்தை சரியான முறையில் சொத்து விவரத்தில் குறிப்பிடவில்லை"** என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இடைமனு எண்.2/2012ன் ம.சா.ஆ 6 ஆன அடங்கலில் உள்ள விவரப்படிதான் பிராது சொத்து விவரத்தில் சொல்லியுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து ஆதியில் கண்ணம்ம நாயுடு பெயரில் இருந்தது என்றால் இல்லை. வழக்கு சொத்து என் அப்பா கண்ணம்ம நாயுடு பெயரில் அடங்கலில் பதிவாகியுள்ளது என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1 அடங்கலில் புல எண்.292/1 விஸ்தீரணம் 21 செண்ட் கண்ணம்ம நாயுடு பெயரில் உள்ளது என்றால் அது பொய். நான் சொல்வது தவறு என்றாலும் அது வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து முறையாக பெறப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் பொய். நான் வீட்டின் மூத்தவர் என்பதால் பட்டா என் பெயருக்கு மாறியுள்ளது என்றால் பொய்.

11. என் அப்பா உயிருடன் இருக்கும்போதே எனக்கும் என் தம்பிக்கும் சரி பாதியாக பிரித்து கொடுத்துவிட்டார்கள் என்றாலும் சரியல்ல. என் தம்பி பாகத்தை என் மாமனார் எனக்கு வாங்கி கொடுத்துவிட்டார். என் மாமனார் அவரது சொத்தை விற்று என் தம்பி சொத்து எனக்கு வாங்கி கொடுத்துவிட்டார். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் உண்மையிலேயே அவ்வாறு ஆவணம் இருந்திருந்தால் நான் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. என் அப்பா உயிருடம் இருந்த போதே வீட்டு மனையை பிரித்து அவரவர் பாகத்திற்கு கொடுத்துவிட்டதால் மற்ற சொத்துக்களுக்கு மட்டும் வாதி அ.வ.எண்.54/2015ஐ தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு

சொத்தில் எனக்கு உரிமை உள்ளதுபோல் வாதிக்கும் பாதி உரிமை உள்ளது என்றாலும் வாதி கோரியப்படி தீர்ப்பு செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் வழக்கு சொத்து தணிகாசலம் பெயரில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் தவறு. வாதி கோரியப்படி பிராதுப்படி தீர்ப்பு செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)